ஓம்

ராகம் ப்ருந்தாவளீ                                        தாளம் ஆதி

பல்லவி

உன் பாதம் சரணடைந்தேன், ஸத் குருநாதா
மாந்தர்களை கரையேற்றிடும், ஜெய குருநாதா  (உன் பாதம்)



அனுபல்லவி

வாழ்க்கையில் முன்னேறிட உன். அருள் வாக்குத்தான் துணையே
தாழ்மையுடன் உந்தன் பாதம் . பணிந்தேன் என்றும் துணையே
(உன் பாதம்)

சரணம் 1

அக்ஞானத்திலிருந்து மீள உன் பொன் மொழிதான் துணையே
மெய்ஞானம் அடைந்திட உன் அருள் வேண்டும் குருதேவா
தத்வமஸி பொருளின் உண்மையை விளக்கிய குருநாதா
ஸதாபிஷேகம் கண்ட ஸ்வாமி ஸ்ரீ தயானந்த ஸரஸ்வதி (உன்பாதம்)

சரணம் 2

தினம் உந்தன் அருள்மொழிக் கேட்டு
மனம் கனம் குறைந்ததே!
எண்ணங்கள் லேசானதே!
தெய்வத்தை நேர் முகம் குருமூலம் பார்க்கின்றேன்!
ஆனந்த நிலையை அடைந்தேனே!



மத்யமகாலம்

ஆனந்தம், ஆனந்தம், ஸ்ரீ தயானந்தம்!
ஆனந்தம், ஆனந்தம், ஸச்சிதானந்தம்!
ஆனந்தம், ஆனந்தம், பூர்ணானந்தம்!
ஆனந்தம், ஆனந்தம், நித்யானந்தம்
ஆனந்தம், ஆனந்தம் ஸங்கீதானந்தம்
ஆனந்தம், ஆனந்தம், பரமானந்தம்! (உன்பாதம்)

I offer this song with heart full of prayers and pranams
To the world Acharya Pujya Sri Swami Dayananda Saraswati;
who makes my ‘Day Ananda’!

Koti Namaskarams
Smt. K. Lakshmi Amma